# சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

**அ.வ எண்: 172/2019 தெய்வாணை(பிசா1) தேதி:04.08.2025**

**பிசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 5 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனது கணவர் பெயர் வீரபெருமாள். வழக்கின் வாதி எனது கணவரின் முதல்மனைவியின் மகள் அவார். எனது கணவர் வீரபெருமாளின் உடன்பிறந்த நபர்கள் என்கணவரையும் சேர்த்து மொத்தம் 3 பேர். அவர் பெயர் சின்னச்சாமி, சண்முகம் மற்றும் எனது கணவர் ஆவார்கள். தாவாசொத்துக்கள் ஆதியில் யார் பெயரில் இருந்தது என்றால் என்கணவர் பெயரில் இருந்தது. என் கணவருக்கு உள்ளது போல் சின்னச்சாமி, சண்முகம் ஆகியோர்களுக்கும் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி கிருஷ்ணசாமி என்பவர் மேற்படி சண்முகம் என்பவரது மகன் ஆவார். என்கணவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை தான் நான் கிருஷ்ணசாமிக்கு கிரையம்செய்துகொடுத்துள்ளேன் என்றால் இல்லை. தாவா 1வது இலக்கச்சொத்தில் பிரிவினை இல்லாத பகுதியை மட்டுமே 5ம்பிரதிவாதி கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. 5ம்பிரதிவாதி கிரையம்பெற்றது போக மீதம் உள்ளஇடம் வாதியிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. நான் காட்டுவேலை செய்கிறேன். 5ம்பிரதிவாதி கிரையம்பெற்ற காட்டிலும் நான் விவசாயம் செய்தேன் என்றால் சரிதான். தற்போது வரை 5ம்பிரதிவாதி வேலைக்கு அழைத்தால் நான் அவரது காட்டுவேலைக்கு செல்வேன் என்றால் சரிதான். 5ம்பிரதிவாதி கிரையம் வாங்குவதற்கு முன்பு புரோக்கர்களுடன் வந்து இடத்தை பார்த்து அளந்துதான் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. வாதி எனக்கு பாகம் தருவதாக கூறியதால்தான் நான் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவந்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாசொத்தில் உள்ள கம்பெனியில் இருந்து

எனக்கு பணம் வாங்கித்தருவதாக வாதி என்னிடம் கூறியுள்ளார் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>** 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.